# 15 திருமூலர்

**(அ) சித்தர்கள்**

மனித சரீரத்திலே தெய்வபக்தி கொண்டு அதனுள் அருட்சக்தியை வளர்த்து, ஆன்ம வளர்ச்சியில் மக்களிடையே தேவர்களாகவும் மனித தெய்வங்களாகவும் உலவி, அருள்வாழ்வு வாழ்ந்து அருளை வழங்கி வருகின்ற மகான்களே சித்தர்களாவர்.

சித்தர்கள் என்ற சொல்லுக்கு சித்துக்கள் வாய்க்கப் பெற்றவர்கள் என்று பொருள். இந்த உடம்பினுள்ளே தெய்வ தரிசனம் பெற்று, இறை ஆற்றலை இந்த உடம்பினுள்ளே வளர்த்து, உலகிற்குத் தங்கள் யோக சாதனையினால் ஒளியூட்டி, மனித சமுதாயத்தைப் பாதுகாப்பதே சித்தர்களின் குறிக்கோளாகும்.

சித்தர்கள் நம் உடலின் ஆறு ஆதாரங்களின் மையங்களில் எவ்வாறு சக்தியூட்டுவது, மனிதன் மனதால் எப்படி உயர்கிறான் என்பதை விளக்கி, மனிதனுக்கும் விலங்குகளுக்கும் உள்ள அடிப்படையான வேறுபாட்டினை எடுத்துக் காட்டியுள்ளனர். இம்மனத்தின் ஆற்றலைப் பெருக்கிக்கொள்வதன் மூலம், நாம் நிகழ்த்த வேண்டிய தவ ஒழுக்கங்களைப் பற்பல யோக முறைகளைச் சொல்லி வாழ்ந்து காட்டியுள்ளார்கள், மேலும் ஒழுக்கத்திற்கும் சீலத்திற்கும் தவவாழ்க்கைக்கும் மனத்தைக் கொண்டு பயிற்சி செய்யும் முறைமையினையும் சித்தர்கள் விளக்கியுள்ளார்கள்.

''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' இதுவே சித்தர்களின் வாழ்வின் ஆதார சுருதி.

வெளிச் சடங்குகளையும், வெளிச் செயல்களையும் உதறிப் பேசுகிற போக்கானது சித்தனது ஆன்ம பக்குவத்திலிருந்து தெளிந்து வருகிற ஞானப் பொறியாகும். தமிழகத்திலும், ஈழத்திலும் சித்தர்கள் பலர் இருந்திருக்கின்றனர். ஆயினும், தமிழ் நாட்டில் சித்தர் மரபொன்று நெடுங்காலமாக இருந்து வருகின்றது. அச்சித்தர்கள் பதினெண்மரெனக் கூறுவது மரபாகும். அகத்தியர், திருமூல சிவவாக்கியர், பட்டினத்தார், பத்திரகிரியார், அகப்பேய்ச் சித்தர், குதம்பைச் சித்தர், கடுவெளிச் சித்தர், அழுகணிச் சித்தர், கொங்கணச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர், கருவூரார், மதுரை வாலைசாமி, கணபதிதாசர், உரோம ரிஷி, சட்டைமுனி, இராமதேவர் முதலானோர் பதினெண் சித்தர்களில் அடங்குவர். ஈழத்திலும் பெரியானைக்குட்டிச் சித்தர், சித்தானைக்குட்டிச் சித்தர், நவநாதச் சித்தர், கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் எனச் சித்தர்கள் பலர் இருந்திருக்கின்றனர். அவர்களில் முதன்மைச் சித்தரான திருமூலர் பற்றிச் சுருக்கமாக நோக்குவோம்.

**(ஆ) திருமூலர்**


திருக்கைலாயத்தில் இருந்த சுந்தரநாத முனிவரிடம், தமிழ்நாட்டிலிருந்து வந்திருந்மாலங்க தேவர் தென்னாட்டில் நல்வழி காட்ட யாருமின்றிய நிலைமையினை விளக்கினார். மேலும் அம்மக்களிற்கு வாழும் நெறியை உணர்த்தும்படி வேண்டினார்.

மாலங்கரின் வேண்டுகோளை ஏற்று சுந்தரநாதர் தமிழ் நாட்டில் உள்ள சிதம்பரத்தை அடைந்தார். சுந்தரநாதர் திருவாவடுதுறையில் யோக நிட்டையில் ஆழ்ந்தார். மூலத்தை, முழுமுதலை நாடி உணர்ந்து திருமூலர் ஆனார். தம்மை இறைவன் படைத்தது ஏன் என்பதனையும், தமக்கு இட்டபணி என்ன என்பதையும் அவர் மெய்ஞானத்தினால் தெளிந்துகொண்டார்.



சித்தத்தை சிவன்பால் வைத்த சித்தரான திருமூலர் சித்தர் பரம்பறையின்தலைமைச் சித்தராவார். திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் இவ் உலகில் வாழ்ந்து ஆண்டுக்கொரு மந்திரப் பாடலாக மூவாயிரம் திருமந்திரப் பாடல்களை இயற்றினார் என்று கூறுவர். சேக்கிழாரின் பெரியபுராணத்தில் திருமூல நாயனார் வரலாறு இன்னொரு விதமாகக் கூறப்பட்டுள்ளது. அதன் சுருக்கம் பின்வருமாறு.

திருக்கைலாசத்திலே திருநந்தி தேவருடைய அருளைப் பெற்ற மாணாக்கர் களாகிய சிவயோகிகளுள் ஒருவர் பொதிகை மலைக்கு வரும் வழியில் திருவாவடுதுறையை அடைந்தார். ஒரு நாள் புல்வெளிப் பிரதேசத்தில் நடந்து செல்லும் பொழுது, அங்கு பசுக்கள் புல் மேயாது சுற்றி நின்று கதறுதலைக் கண்டார். சாத்தனூர் எனும் கிராமத்தில் வசித்த மூலன் எனும் இடையன் அப்பசுக்களை மேய்ப்பவன். அன்றைய தினம் அங்கு இறந்து கிடந்தான். அவனது உடலைச் சுற்றி நின்று பசுக்கள் தமது கவலையை வெளிப்படுத்தின.



பசுக்களின் துயரத்தைப் போக்கத் திருவுள்ளம் கொண்டார் சிவயோகியார். மூலன் உயிர் பெற்று எழுதலே அதற்கு வழி எனக் கண்டார். கூடு விட்டுக் கூடு பாயும் சித்தின் மூலம் தமது உடலை விட்டு, மூலனின் உடலினுற் புகுந்து திருமூலராய் எழுந்தார். பசுக்கள் மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தன. மாலையானதும் பசுக்கள் தமது கன்றுகளை நினைந்து வீடு நோக்கிச் சென்றன. அவற்றுடன் மூலன் வீடு சென்று உண்மையினை உணர்த்தி, வனத்திற்குச் சென்று தமது உடலை எங்கு தேடியும் கிடைக்காமல் திகைத்தார். சிவபெருமானே ஆகமங்களின் பொருளைத் தமிழில் திருமந்திரமாக பாடுவிப்பதற்கே நிகழ்ந்தது என்பதை ஞானத்தினால் அறிந்துகொண்டார்.

திருவாவடுதுறை சிவாலய மேற்குப் பிரகாரத்தினுள்ள அரச மரத்தின் கீழ்ச் சிவயோக நிட்டையில் அமர்ந்தார் திருமூலர். திருமூலர் தமக்கு இறைவனால் இட்ட பணி நிறைவுற்றதும் திருக்கைலாயத்தை அடைந்தார்.

**(இ) திருமந்திரம்**

திருமந்திரம் சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாவதாகும். மூவாயிரம் பாடல்களையும் ஒன்பது தந்திரங்களையும் கொண்டது. இந்நூல் திருமூலரால் இயற்றப்பட்டது.

ஆகமங்கள் இருபத்தெட்டும் இறைவனால் அருளப் பெற்றவை. ஆயினும் நந்தியும் பெருமான் ஸ்ரீ கண்ட உருத்திரர்பால் பெற்ற 9 ஆகமங்களைத் திருமூலர் முதலிய எட்டுச் சீடர்களுக்கும் உபதேசித்தருளினார். திருமூலர் அவற்றின் சாரமாக ஒன்பது தந்திரமாக தமிழிலேயே பாடியுள்ளார். அவையாவன முதல் தந்திரம் காரண ஆகமத்தின் சாரமாகவும், இரண்டாம் தந்திரம் காமிக ஆகமத்தின் சாரமாகவும், மூன்றாம் தந்திரம் வீராகமத்தின் சாரமாகவும், நான்காம் தந்திரம் சிந்தியாகமத்தின் சாரமாகவும், ஐந்தாம் தந்திரம் வாதுளவாகமத்தின் சாரமாகவும், ஆறாம் தந்திரம் வியாமளாகமத்தின் சாரமாகவும், ஏழாம் தந்திரம் காலோத்திராகமத்தின் சாரமாகவும், எட்டாம் தந்திரம் சுப்பிரபேதாகமத்தின் சாரமாகவும், ஒன்பதாம் தந்திரம் மகுடாகமத்தின் சாரமாகவும் அமைந்திருக்கின்றது என்பர் அறிஞர்.

முதல் தந்திரம் பதி, பசு, பாசம் என்னும் மூன்றும் நித்தியப் பொருள் என விளக்கி, யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை, கொல்லாமை, புலால் மறுத்தல், முதலான குற்றங்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வர் என்பதை விளக்கமாக எடுத்துரைக்கின்றது.

இரண்டாம் தந்திரம் சிவனே மெய்ப்பொருள் என்று உணர வேண்டும் என்கிறது. இறைவனின் அட்ட வீரட்டங்களைப் பற்றிக் கூறி, அவை உண்மையை உணர்த்தும் புனைவு உருவம் என்பதனைத் திண்மையுற விளக்கியுள்ளார். முப்புர அழிவு உண்மையை விளக்கும் போது அது சிவனின் திருவுள்ளக் குறிப்பேயன்றிப் புறத்துத் தேர் முதலியனவற்றின் புறச் செயல்கள் அன்று என விளக்குகிறார். சிவனின் அருவுருவத் திருமேனியே வழிபாட்டுக்கு உரியதென்கிறார்.

மூன்றாம் தந்திரம் சிவன், சிவை இவர்களது தன்மை உலகியலோடு ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது. ஆன்மாக்களுக்கு இன்பமாவது இல்வாழ் தவநிலையே என்றும் அதற்கு அட்டாங்க யோகங்களும் துணைநிற்கும் என்றும் எடுத்துரைக்கின்றது.

நான்காம் தந்திரம் ஆன்மா தன்னைச் சிவனுக்கு அடிமையாக்குதல் வேண்டும் என்கிறது. அதற்கு உறுதுணையாக'சிவாயநம' என்னும் திருவைந்தெழுத்தென்று, அதன் மகிமைகளைக் கூறுகின்றது. மேலும் அம்மையும், அப்பனும் உயிரும், அறிவும் போன்று ஒன்றே என்று கூறுகின்றார்.

ஐந்தாம் தந்திரம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு அறம் பற்றியும் நால்வகைச் சைவம், நால்வகை நெறி, நால்வகைத் தொண்டு, அத்தொண்டால் பெறும்பேறு பற்றிக் கூறுகிறது.

ஆறாம் தந்திரம் சிவநெறியை அடைய எண்ணுபவர்களுக்கு உறுதுணையாய் வந்து அருள் செய்பவர் சிவகுரு என்கிறது.

ஏழாம் தந்திரம் சிவலிங்க, சிவனடியார் வழிபாடு பற்றி விளக்கமாகக் கூறுகிறது.

எட்டாம் தந்திரம் பக்தியின் முதிர்வே முத்தியாகும், முத்தியின் முடிவே செயலற்ற நிலை என முத்தியின் முடிந்த நிலையை விளக்குகிறது.

ஒன்பதாம் தந்திரம் இது அனைந்தோர் இயல்பு கூறுகிறது. சித்தாந்த சைவர்

உறைகின்ற இடமே மடம் என்று குறிக்கப்படுகிறது. குருமடம் கண்டவரே குருவினைக் கண்டவராவார். சிறப்பாக விளங்குவது குரு நெறியாகும்.

திருமூலரின் உலக நோக்கும் குறிக்கோளும் தெளிவானவை. ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்றுரைத்த திருமூலர் மனுக்குலத்தை ஒக்க நோக்கியதோடு, உயிருள்ளவற்றிலும் இல்லாதவற்றிலும் இறைவனைத் தரிசித்தார். மனித குலத்திற்கு புத்துயிரூட்ட விழைந்த திருமூலர் உலக ஆசாபாசங்களில் அலைக்கழிந்தவர்களிடையே ஆன்மீக ஒளியைப் பாய்ச்சினார். உறுதியான பக்தியினால் ஒவ்வொருவரும் இறைவனின் பாதாரவிந்தங்களை அடையமுடியுமென்று எடுத்துக்காட்டினார். உடல் சார்பான வாழ்க்கையில் இருந்து ஆன்மீக வாழ்க்கையில் உச்ச நிலையினை எய்துவதற்குச் செய்ய வேண்டிய முயற்சிகளை எடுத்துரைத்தார்.

மூவாயிரம் திருமந்திரப் பாடல்களிற்கும் பதச்சோறாக இரண்டு பாடல்களைப் பார்ப்போம்.

**''நடுவு நின்றார்க்கன்றி ஞானமும் இல்லை**
**நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை**
**நடுவு நின்றார் நல்ல தேவரும் ஆவார்**
**நடுவு நின்றார் வழி நானும் நின்றேனே''**

என்பதன் மூலம் நீதி நெறி தவறாது நடுவு நிலை நின்று வாழவேண்டியமையின் அவசியத்தை வலியுறுத்தினார்.

**''என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்**
**பொன் போல் கனலில் பொரிய வறுப்பினும்**
**அன்போடு உருகி அகம் குழைவார்க்கன்றி**
**என்போல் மணியினை எய்த ஒண்ணாதே''**

அன்போடு உருகி மனம் குழைவதனால் அன்றி எலும்பை விறகாக்கித் தசைகளை வறுத்துத் தவம் செய்தாலும் இறைவனை அடையமுடியாது என அறுதி யிட்டுக் கூறுகிறார். அன்பே சிவம். அதனை அடைவதற்கான வழியும் அன்பே தான். சிவானுபவத்திற்கு உகந்த சாதனம் அன்பு நெறி என்பதே திருமந்திர சாரமாகும்.

## பயிற்சிகள்

1. சித்தர்கள் என்போர் எத்தகைய பண்புகளை உடையவர்கள்?
2. திருமூலரின் வரலாற்றினைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
3. திருமந்திரம் எத்தனை தந்திரமாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
4. சிவானுபவத்திற்கு உகந்த சாதனமாகத் திருமூலர் எதனைக் குறிப்பிடுகின்றார்.

## செயற்பாடு

★ திருமந்திரத்தின் சிறப்புப்பற்றி கட்டுரை ஒன்று எழுதுக.

## பாடச்சுருக்கம்

(அ) - சித்தர்கள்

★ உடலைத் தெய்வமாகப் போற்றி, அருட்சக்தியை வளர்த்து, ஆன்மீக வளர்ச்சியில் உயர்ந்தவர்களே சித்தர்கள்.

★ வெளிச்சடங்குகளையும், வெளிச்செயல்களையும் உதறிப்பேசும் போக்கானது, உள்ளத்துள்ளே அவை நிகழ்த்தவேண்டும் என்ற ஞானநெறியின் பொருட்டேயாகும்.

(ஆ) திருமூலர்

★ சுந்தரநாத முனிவர் சிதம்பரத்திற்கு வந்து, சைவமக்களுக்கு வழிகாட்ட மூவாயிரம் வருடங்கள் வாழ்ந்து, 3000 திருமந்திரப் பாடல்களைப் பாடியுள்ளார்.

★ பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் திருக்கைலாயத்திலிருந்து வந்த ஒருவர் தமிழ்நாட்டிற்கு வந்து மூலன் என்ற இடையனின் உடற்புகுந்தமையால் திருமூலரானார் என்று கூறுகின்றனர்.

(இ) திருமந்திரம்

★ திருநந்திதேவர் உபதேசித்த ஒன்பது ஆகமங்களின் சாரமாகவே ஒன்பது தந்திரங்களாக வகுத்து, 3000 திருப்பாடல்கள் யாத்துள்ளார்.

★ திருமந்திரம் முப்பொருள் உண்மை, நிலையாமை, பஞ்சமாகுற்றங்கள் செய்யாமை, சிவனே மெய்ப்பொருள், முப்புர அழிவு வெளிச்செயல் அல்ல, அட்டாங்க யோகமுறை, திருவைந்தெழுத்து, நால்வகை நெறி, சிவலிங்க வழிபாடு என்பன போன்ற பல சைவசாதனங்கள் பற்றி அனுபவ ஞானத்தின் மூலம் எடுத்துரைக்கின்றது.